

சென்னை – அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அரியலூர் மாவட்ட தமிழ் மாநில, காங்கிரஸ் தலைவர் பனங்கூர் எஸ்.ஜெயராமன் உள்பட 25 பேர், அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அரியலூர் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தார்கள்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.3.2026) மாலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் புதுக்கோட்டை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

## ‘ஸ்டாலின் ஸ்டேட்மெண்டில்’ நான் உறுதியளித்தபடி

# பசுமைப் பரப்பு - சீரான நடை பாதைகள் - அழகிய பூங்காக்கள் நிறைந்த மாநகரங்களை தமிழ்நாடெங்கும் உருவாக்கிக் காட்டுவோம்!

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!



சென்னை, மார்ச் 24-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலைதளப்பதிவொன்றில், “ஸ்டாலின் ஸ்டேட்மெண்டில் நான் உறுதியளித்தபடி பசுமைப்பரப்பும், சீரான நடை பாதைகளும், அழகிய பூங்காக்களும் நிறைந்த மாநகரங்களைத் தமிழ்நாடெங்கும் உருவாக்கிக் காட்டுவோம்!” எனச் சூளுரைத்துள்ளார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின், அவ்வலைதளப் பதிவு வருமாறு:-

**தி.மு.க. என்றாலே வளர்ச்சி; தி.மு.க. என்றாலே நவீன உள்கட்டமைப்பு! சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் புதிய மேம்பாலங்கள் ஒருபுறம், பொதுப்போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் புதிய, தரமான பேருந்துகள் மற்றும் டிஜிட்டல் பயணச்சீட்டு முறைகள் மற்றொரு புறம்!**

**‘ஸ்டாலின் ஸ்டேட்மெண்டில்’ நான் உறுதியளித்தபடி 2030இல் அதிகரிக்கப்பட்ட பசுமைப் பரப்பும், சீரான நடை பாதைகளும், அழகிய பூங்காக்களும் நிறைந்த மாநகரங்களைத் தமிழ்நாடெங்கும் உருவாக்கிக் காட்டுவோம்!**

Vote For DMK

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பண்பாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் –

# வெளிநாட்டு அகழாய்வு முயற்சிகளின் நிலை என்ன?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச். 24–

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கலாச்சார அமைச்சகத்திடம் பண்பாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

அதாவது, கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையில் பண்பாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

மேலும், கடந்த 10 ஆண்டுகளில் இந்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் கலை வரலாற்றாளர்கள் வெளிநாடுகளில் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகளின் விவரங்கள் என்ன? இத்தகைய ஆய்வுகளுக்காக போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? என்ற கேள்விகளை முன்வைத்தார்.

இதற்கு ஒன்றய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் சேகாவத் பதில் அளித்தார்.

அந்த பதிலில்:

இந்திய கலாச்சார அமைச்சகம் கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட மொத்தம் 115 நாடுகளுடன் பண்பாட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இவ்வொப்பந்தங்களின் மூலம் பண்பாட்டு பரிமாற்ற திட்டங்கள் (Cultural Exchange Programmes – CEPs) செயல்படுத்தப்பட்டு, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், வரலாற்று சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் புதுப்பிப்பு பணிகளுக்காக, இந்திய தொல்பொருள் ஆய்வு துறை ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டின் கீழ் ஆய்வு குழுக்களை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வருகிறது.

ஆனால், இந்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் கலை வரலாற்றாளர்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் ஆய்வு முயற்சிகளுக்காக தனியாக தனித்த நிதி ஒதுக்கீடு இல்லை.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர்களுக்கான வசதிகள் குறித்து கண்காணிக்கப்படும்!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

சென்னை, மார்ச்.24-

அனைத்து வாக்குச்சாவடிகளி லும் வாக்காளர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கண்காணிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வாக்காளர்களுக்கு வசதிகள் தமிழ்நாடு, கேரளா உள்பட 5 மாநிலங்களில் நடக்க உள்ள தேர்தல்களுக்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 15ஆம் ந்தேதி அறிவித்தது.

இதில் உள்ள 2 லட்சத்து 18 ஆயிரத்து 807 வாக்குச்சாவடிகளுக்கு ஓட்டுபோட வரும் வாக்காளர்களுக்கான வசதிகள் மற்றும் ஒட்டுப்பதிவு அன்று வாக்காளர்க ளுக்கு தேவையான உதவிகளை செய்துதர மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**குடிநீர் வசதி!**

குறிப்பாக குடிநீர், நிழலுடன் கூடிய காத்திருப்பு பகுதி, தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை, போதிய வெளிச்சம், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்ககான முறையான சாய்வுதளம். தரப்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு அறை மற்றும் முறையான வழி காட்டி பலகைகள் ஆகியவை அடங்கும். வாக்காளர்கள் தங்களது முறைக்காக காத்திருக்கும் போது அமருவதற்கு ஏதுவாக, வரிசையில் குறிப்பிட்ட இடை வெளிகளில் பெஞ்சுகள் அமைக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

வாக்காளர் விழிப்புணர்வை வலுப்படுத்த, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் 4 சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட வாக்காளர் வசதி சுவரொட்டிகள் முக்கியமாக காட்சிப்படுத்தப்படும். இந்த சுவரொட்டிகளில் வாக்குச்சாவடி விவரங்கள், வேட்பாளர் பட் டியல், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களின் பட்டியல் மற்றும் வாக்குப் பதிவு நடைமுறை ஆகியவை இடம்பெற்றிருக்கும்.

**வாக்குச்சாவடியில் உதவி மையங்கள்!**

வாக்காளர்கள் தங்களின் வாக்குச்சாவடி எண் மற்றும் அந்தந்த சாவடியின் வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண்ணைக் கண்டறிய உதவுவதற்காக, ஒவ்வொரு வாக்குச்சாவடி அமைவிடத்திலும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் (பி.எல்.ஒ.) அதிகாரிகள் குழுவுடன் கூடிய வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்படும். வாக்காளர்கள் வாக்குச்சாவடி வளாகத்தை நெருங்கும்போது எளிதில் தெரியும் வகையில் இந்த உதவி மையங்கள் முக்கிய வழிகாட்டி பலகைக ளைக் கொண்டிருக்கும். வாக்காளர்களின் வசதிக்காக தேர்தல் ஆணையம் எடுத்துள்ள பல முயற்சிகளில் ஒன்றாக, வாக்குச்சாவடி நுழைவாயிலுக்கு வெளியே வாக்காளர்களுக்கான செல்போன் வைப்பு அறை வசதி வழங்கப்படும். வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குள் நுழைவதற்கு முன் தங்களது செல் போனை (அணைக்கப்பட்ட நிலையில்) நியமிக்கப்பட்ட தன்னார்வலரிடம் ஒப்படைத்து விட்டு, வாக்களித்த பிறகு அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் இவை கண்டிப்பாகப் பின் பற்றப்படுகிறதா? என்பது கண்காணிக்கப்படும். மேற்கண்ட தகவல்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை இயக்குனர் ப.பவன் தெரிவித்துள்ளார்.

**ஜனநாயக கடமை!**

இதற்கிடையே தமிழக தலைமைதேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சிறப்பு தீவிர திருத்தம் முடிவடைந்த பின்னர் வெளியிடப் பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே நடக்க இருக்கும் சட்டசபை தேர்தலில் வாக்களிக்க முடியும். பெயர் விடுபட்டு இருந்தால் பெயர் சேர்க்க வருகிற 26 ந்தேதி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி தகுதியானவர்கள் அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்கும் ஜனநாயக கடமையை தவறாது நிறைவேற்ற வேண்டும். வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்க்க voters.eci. gov.in மற்றும் www.elections.tn.gov. in என்ற இணையதள முகவரி அல்லது ECINet செயலியை பார் வையிடுவதன் மூலம் தகவல்களை அறிந்து கொள்ள முடியும். இதுதவிர 1950 என்ற கட்டண மில்லா வாக்காளர் உதவி எண்க ளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் கட்டுப்பாட்டு மையம் மற்றும் ஊடகக் கண்காணிப்பு மையத்தின் செயல்பாடுகள்!

## தேர்தல் பொறுப்பாளர் வீரேந்திர குமார் ஆய்வு!

*சென்னை, மார்ச் 24-*

*சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் வீரேந்திர குமார், ரிப்பன் கட்டட வளாகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு மையம் மற்றும் ஊடகக் கண்காணிப்பு மையத்தின் செயல்பாடுகள் குறித்து நேற்று (23.03.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, தேர்தல் நன்னடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் கட்டுப்பாட்டு மையம் மற்றும் ஊடகக் கண்காணிப்பு மையம் ஆகியவை ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டு சுழற்சி அடிப்படையில் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு தொடர் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*இம்மையங்களின் செயல்பாடுகள் குறித்து சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தேர்தல் பொதுப் பார்வையாளர் அவர்கள் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டு கட்டுப்பாட்டு மையத்தில் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ பதிவு கண்காணிப்பு ஆகிய குழுக்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளை GPS கருவி மூலமாக கண்காணிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டார்.*

*மேலும், தொலைபேசியின் வாயிலாக கட்டுப்பாட்டு அறைக்கு வரும் தேர்தல் தொடர்பான புகார்கள், cVIGIL செயலி மூலம் பதியப்படும் புகார்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்வதை கேட்டறிந்து, அதன் தொடர்பாக பராமரிக்கப்படும் பதிவேடு விவரங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*இதனைத் தொடர்ந்து, ஊடகக் கண்காணிப்பு மையத்தில் தொலைக்காட்சிகளில் வெளியிடப்படும் தேர்தல் தொடர்பான செய்திகள், விளம்பரங்கள், கட்டணச் செய்திகள், தேர்தல் விதிமீறல்கள் உள்ளிட்ட பணிகளை கண்காணித்து பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த ஆய்வின்போது, தேர்தல் தொடர்பான செய்திகளை தீவிரமாக கண்காணித்து அதன் மீது உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கட்டுப்பாட்டு அறை ஒருங்கிணைப்பு அலுவலருக்கு அவர் அறிவுறுத்தினார்.*




சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் வடக்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் நேற்று 23.03.2026 மாலை நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், ப. தாயகம் கவி எம்எல்ஏ,பகுதி கழகச் செயலாளர் செ. தமிழ் வேந்தன், புனிதவதி எத்திராஜ் எம் சி, என் கிருஷ்ணமூர்த்தி,பி.உதயசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், BLA2,BDA,BYO ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் கால்நூற்றாண்டுகால கோரிக்கை நிறைவேறியது!

# வைகை மற்றும் கிருதுமால் நதிகளின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள்!

## 25 —க்கும் மேற்பட்ட கிராம மக்கள் நன்றி!

திருப்புவனம் , மார்ச் 24 –

வைகை ஆறு மற்றும் கிருதுமால் நதி குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டப்பட்டதால் 25 கிராம மக்கள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

திருப்புவனம் சுற்று வட்டார கிராம பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வந்த லாடனேந்தல், பெத்தானேந்தல் இடையே வைகை ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலமும், பழையனூர், ஓடாத்தூர் இடையே கிருதுமால் நதியின் குறுக்கே உயர் மட்ட பாலம் கட்ட வேண்டும் என்பதும் கோரிக்கையாக இருந்து வந்தது. தமிழக அரசின் முயற்சியால் நான்கு ஆண்டுகளில் இரண்டு பாலங்களும் கட்டப்பட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் பயன்படுத்தி வருகின்றனர்.

பெத்தானேந்தல், மணல்மேடு கிராம மக்கள் லாடனேந்தல் பெத்தானேந்தல் இடையே வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் வேண்டும் என நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தனர். தமிழக அரசின் நடவடிக்கையால் ரூ.16.92 கோடி மதிப்பீட்டில் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

374 மீட்டர் நீளம் 9.95 மீட்டர் அகலம் 19 தூண்களுடன் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலம் கட்டப்பட்டுள்ளதால் லாடனேந்தல், பெத்தானேந்தல் மணல்மேடு, கணக்கன்குடி, ஏனாதி, சடங்கி, கருங்குளம், பாப்பாகுடி உட்பட 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

வைகை ஆற்றில் தண்ணீர் வரும் காலங்களில் 10 கி.மீ சுற்றி திருப்புவனம் வரவேண்டிய நிலையில் தற்போது இந்தப் பாலம் கட்டப்பட்டதால் 2 கி.மீ பயணித்தால் பள்ளி, கல்லூரி மாணவர்கள், மதுரைக்கு வேலைக்குச் செல்வோர் பயனடைந்து வருகின்றனர். 10 கிராம மக்களும் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

அதேபோல பழையனூர் ஓடாத்தூர் இடையே செல்லும் கிருதுமால் நதியில் தண்ணீர் ஓடும் காலங்களில் மக்கள் ஆற்றை கடக்க முடியாது. பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் 20 கிமீ சுற்றித்தான் பழையனூருக்கு வர முடியும். கால் நூற்றாண்டு காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கையுடன் போராடி வந்தனர்.

பழையனூர் வல்லாரேந்தல் இடைய கிருதுமால் நதியின் குறுக்கே உயர் மட்டப் பாலம் கட்டியதால் 12கிராமங்கள் பயனடைகின்றன. கிருதுமால் நதியில் செப்டம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை தொடர்ந்து தண்ணீர் செல்லும்.

இதனால் சிவகங்கை மாவட்ட எல்லையிலுள்ள பழையனூரையும், விருதுநகர் மாவட்ட கிராமங்களுக்கும் இடையே கிருதுமால் நதி வருடத்தில் மழை காலங்களில் நதியை கடந்து செல்லும் வல்லாரேந்தல் ஓடாத்தூர், சிறுவனூர், எஸ்.வாகைகுளம், சேந்த நதி, முக்குளம் உள்ளிட்ட 12க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிப்பால் பஸ்கள் வராது.

ஆற்றின் கரையின் இருபுறமும் ஷேர் ஆட்டோக்கள் இயக்கப்படும் நிலை உள்ளது.

உயர்மட்டப்பாலம் கட்ட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. தமிழக அரசு உயர்மட்ட பாலம் கட்ட உத்தரவிட்ட நிலையில், உடனடியாக தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை நபார்டு கிராமச்சாலை திட்டத்தில் 3 கோடியே 57 லட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் பழையனூர் வல்லாரேந்தல் கிருதுமால் நதி குறுக்கே உயர் மட்ட பாலம் கட்டப்பட்டு கடந்த பல மாதங்களாக மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இதனால் விருதுநகர், சிவகங்கை இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த 12 கிராம மக்கள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றியம் பூனிமாங்காடு கிராமத்தில் 150க்கு மேற்பட்ட மகளிர்கள் ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.எல்.விஜயகுமார் ஏற்பாட்டில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எம்.ஏ முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.